(ஆ) கோவை மாவட்டத்தில் திருப்பூர், பல்லடம், சூலூர் முதலிய பகுதிகளில் பருத்திப் பயிருக்கு தேவையான பூச்சி கொல்லி மருந்து கிடைக்காமையும் அதனுல் பருத்தி விளைச்சல் பாதிப்பும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ் அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை திரு. சு. துரைசாமி அவர்களும், திரு. கே. என். குமாரசாமி அவர்களும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ்,

கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும், குறிப்பாக திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திலும் பருத்திப் பயிருக்கு மிகவும் தேவையான பூச்சிக் கொல்லி மருந்தான செவின், மெட்டைஸ்ட் கோம்பை (Sevin, Metycid Combi) போன்ற மருந்துகள் கிடைக்காத காரணத்தால் பருத்தி விளைச்சலுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்ற அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ்,

கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும், குறிப்பாக பல்லடம், சூலூர் போன்ற இடங்களில் பருத்திப் பயிருக்கு மிகவும் தேவையான பூச்சிக் கொல்லி மருந்தான செவின், மெட்டைஸ்ட் கோம்பை. என்ட்ரின் போன்ற மருந்துகள் கிடைக்காத காரணத்தால் பருத்தி விளைச்சலுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்ற அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரைசாமி அவர்களாலும், திரு. குமாரசாமி அவர்களாலும் கொடுக்கப்பட்டிருக்கும் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அடியில்கண்ட என்னுடைய பதிலைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். செவினைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள்.

1971-72-ஆம் ஆண்டிற்கு மாநிலம் முழுவதற்கும் 101.00 மெட். டன் செவின் 10% தூசி மருந்தும் 50 மெட். டன் செவின் 50% W.P. மருந்தும் தேவை. இந்த ரசாயன மருந்துகளில் இது வரை செவின் 10% தூசி மருந்து 101.750 மெட். டன்னும். செவின் 50% W.P. 98.900 மெட் டன்னும், யூனியன் கார்பைட் என்ற நிறுவனத்தார் மூலம் மேற்சொன்ன அளவில் கோயம்

புத்தூர் வட்டாரத்திற்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளது. கோயம் புத்தூர் வட்டாரத்திலேயே கிடைக்கக்கூடிய செவின் 10% தூசி மருந்து, தற்போது 101.75 மெட். டன் கைவசம் உள்ளது. அது தற்போதைக்கு பயன்படுத்திக் கொள்ளப்படும். எனினும் இம் மாத முடிவில் நிலைமை சிரடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேவை ஏற்படவில்லை. எனவே இம் மருந்துகளை வழங்கும் யூனியன் கார்பைட் நிறுவனத்தார் தங்கள் கைவசமிருந்த செவின்

அக்டோபர் வரையிலும் செவின் 10% தூசி மருந்திற்கு அதிக என்ற மூல மருந்து அனைத்தையும் செவின் 50% **W.P** கலப்பு மருந்தை தயாரிக்க பயன்படுத்திவிட்டனர். செவின் என்ற மூல மருந்து அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் படுகிறது. தற்போது செவின் மூல மருந்திற்கும் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. அமெரிக்க துறைமுக வேலை நிறுத்தம் ஏற்பட்ட தின் காரணமாக யூனியன் கார்பைட் நிறுவனத்திற்கு வந்து சேர வேண்டிய சரக்குகள் வராமல் நின்றுவிட்டன. எனினும் யூனியன் கார்பைட் நிறுவனத்தார் தற்போது தங்கள் கைவசமுள்ள செவின் மூல மருந்தைக் கொண்டு செவின் 50% **W.P.** கலவை மருந்தை தயாரித்து நவம்பர் மாதம் முதல் வாரத்திலிருந்து வாரத்திற்கு 7 மெட். டன் விதமும், செவின் 10% தூசி மருந்து சுமார் 100 மெட். டன் அளவிலும் வழங்க ஏற்பாடு செய்துள்ளனர்.

எனவே யூனியன் கார்பைட் நிறுவனம் 1971-72-ஆம் ஆண்டிற் குரிய வழங்கல் அளவை ஏற்கனவே நிறைவு செய்துவிட்ட போதி லும், இறக்குமதி இடையூறுகள் காரணத்தால் தேவைக்கு அதிக மான கூடுதல் மருந்தை வழங்க இயலவில்லை. எனினும் கூடுதல் வழங்கலுக்கு கிடைத்த அளவு முழுவதும் பருத்தி விளையும் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள் கிறேன்.

(2) மெட்டாசிட் கோம்பை (**Metyeid Combi**) மெட்டாசிட் கோம்பையைப் பொறுத்தவரை, இந்த இரசாயன மருந்து, மெதைல் பராத்தியான் டி.டி.டி. ஈ.சி. **Methyl Parathilan D.D T.E.C.** என்பதன் கலவையாகும். மெட்டாசிட் கோம்பை திருவாளர்கள் பேயர் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தயாரிப்பாகும். மேற்சொன்ன இரசாயன மருந்திற்குப் பதிலாக, மெட்டாசிட் கோம்பிக்குச் சமமானதும், விலைமலிவானதும், பிற நிறுவனங்களின் தயாரிப்பு ஆனதுமான "பாராகுளோர்" (**Para. chlor**) ஏற்கப்பட்டுள்ளது. இதுவரை, நிறுவானத்தினிடம் கொடுக்கப்பட்ட வழங்கலாணையில் குறிப்பிட்ட அளவான 90,000 லிட்டர் அளவில், கோயம்புத்தூர் மாவட்டத்தில், 30,000 லிட்டர் "பாரக்லர்" வழங்கப்பட்டுள்ளது. உரிய நேரத்தில் போது மான அளவு டி.டி.டி. ரசாயன மருந்து கிடைப்பது இடையூறாக உள்ளது என்று நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. இருப்பினும்

பயிர்ப் பாது காப்பு இரசாயன மருந்துகளின் வழங்கல் நிலை குறித்து வேளாண்மைத்துறை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. இது பற்றி நிச்சயமாகக் கவனித்து ஆவன செய்யப்படும்.

திரு. சு. துரைசாமி : கடந்த மாதத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் இந்த மருந்துகள் இல்லாமல் இருந்தன. அவற்றை அனுப்ப அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரை உடனுக்குடன் மருந்து வழங்கப் பட்டிருக்கிறது. பல்லடம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் சென்னைக்கே வந்து இங்கே அதற்குரிய ஆணையைப் பெற்றுச் சென்று அதற்குரிய பூச்சி மருந்து வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : பல்லடம், சூலூர் ஏரியாக்களில் பருத்தி தீவிர சாகுபடித் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு 33 சதவிகிதம் மருந்து விநியோகப் பொறுப்பு யூனியன் களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அந்த 33 சதவிகிதம் மருந்து கிடைக்காத காரணத்தால் தனியாரிடத்தில் விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு காலதாமதமாகிறது. இதனுல் பருத்தி தீவிர சாகுபடித் திட்டம் பாதிக்கப்படுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. 33 சதவிகிதம் மருந்து கிடைத்திருக்கு மாளுல் விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு குறைந்திருக்கும். இப்போது விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு அதிகமாகி இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிக்குத் தேவையான மருந்துகளை விநியோகிக்க உடனடியாக ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பொதுவாக, குறிப்பிட்ட அளவு மருந்துகளை ஆங்காங்கு உடனுக்குடன் கொடுத்து வருகிறோம். நாளுக்கு நாள் விவசாயப் பெரு மக்களிடத்தில் உடனுக்குடன் பூச்சி மருந்துகளைத் தெளிக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் வளர்ந்து வருவதன் காரணமாக அதிகமான அளவு மருந்து தேவைப்படுகின்றது. கோவை நிலங்கள் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டிருக் கின்றன. இன்று அல்லது நாளை முதல் அந்த மாவட்டத்தில் 50,000 ஏக்கர் நிலத்திற்கு உடனடியாக விமான மூலம் பூச்சி மருந்து தெளிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. தீவிர மாவட்டத்தைப் பொறுத்தவரை இந்த ஆண்டு 150,000 ஏக்கர் சாகுபடித் திட்டம் அமலாகி இருக்கும் பகுதியில் ஹெலிகாப்டர் மூலமாக மருந்து தெளிக்கும் செலவு எல்லாவற்றையும் அரசே ஏற்றுக்கொள்ளுகிறது. ஆங்காங்கு உடனுக்குடன் மருந்துகளை அனுப்பி வழங்குவதற்கான ஏற்பாடுகளைத் தமிழக அரசும் வேளாண்மைத் துறையும் செய்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.